தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி ஞ பங்குனி மீ 26 உ (8-4-'23.) | ப. 48.

விஷய அடக்கம்.

1. ஸ்திரீகளும், நாவல்களும் ... 482
[C. N. மகாதேவன் B. A.]
2. வாலிபப் பருவம் ... 483
3. புயற் காற்று ... 484
[V. நாராயணையர், M.A., M.L.,]
4. உலக நடை ... 487

தமிழ் உலகு

ஒரு வாரப் பத்திரிகை

பத்திராதிபர், S. பட்டாபிராமன், M. A.

சந்தா விவரம்:—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் ரூ. 3 0 0	½-வருஷம் ரூ. 3 8 0
1-வருஷம் ரூ. 5 0 0	1-வருஷம் ரூ. 6 0 0

'தமிழ் உலகு' கார்யாலயம்

16, பசுபதி அக்கிரஹாரம்,

மைலாப்பூர், சென்னை.

நமது சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.

இப்பகுதியுடன் நமது தமிழ் உலகுக்கு ஒரு ஆண்டு நிறைகின்றது இச்சிறு குழவியை இதுவரை ஆதரித்து வந்த அன்பர்கள் அனைவருக்கும் வந்தனமளிக்கின்றோம். இதுவரை 'தமிழ் உலகு' நடந்து வந்ததில் தமிழ் உலகுக்கு ஏற்பட்ட நன்மைகளில் ஒன்றேனும் அதை மாதப்பத்திரிகை யாக்குவதால் குன்றாது என்று நம்பி, இந்தப் பத்திரிகையை மாதாந்தரமாகச் செய்யத் தீர்மானித்து புது வருஷம் முதல் அந்தந்த மாதம் 15-ந் தேதியன்று வெளியிடுவோம். அதை சென்ற வருஷத்தில் ஆதரித்தவர்களும் பிறரும் அதிக அன்புடன் வரவேற்பார்கள் என்று நம்புகின்றோம். வாரப் பத்திரிகையில் உலக நடை முதலிய தற்காலச்செய்திகள் அப்போதைக்கப்போது பதிப்பிக்க இடமிருந்தது. ஆயினும், தினசரிப் பத்திரிகைகள் பல இருப்பதாலும், அவ்வித விஷயங்கள் அவ்வளவு அவசியம் அன்று என்பதாலும். வாரப் பத்திரிகையாயிருப்பின் வருஷ சந்தாவை ரூ. 5-0-0க்கு குறைவாகச் செய்ய முடியாததாலும், சந்தாதாரர்களின் இஷ்டத்தை அநுசரித்து, தமிழ் உலகை மாதப் பத்திரிகையாக்கி சந்தாவை வருஷத்திற்கு மூன்று ரூபாய் ஆக்குவதே நலமெனத் தோன்றுவதாலும், அப்படியே செய்யத் தீர்மானித்துள்ளோம்.

சித்திரை மாதப் பதிப்பு முதல் தங்களுக்கு வேண்டுமென்ற நமது சந்தா நேயர்களும், பிறரும் உடன் தமிழ் உலகு கார்யாலயத்திற்கு எழுதியனுப்பினல் அநுகூலமாயிருக்கும்.

நமது சந்தா நேயர்கள் யாவரும் மாதப் பதிப்பையும் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் சித்திரை மாதப் பதிப்பை அவர்களுக்கு அனுப்ப உத்தேசித்திருக்கிறோம். ஆகையால், மாதத் 'தமிழ் உலகு' வேண்டாம் என்று கருதும் சந்தாதாரர்கள் உடன் தமிழ் உலகு கார்யாலயத்திற்குத் தெரிவித்தால் நலமாயிருக்குமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

சென்னை ஜார்ஜ் டவுன் ஸ்டிரிங்கர்ஸ் தெருவு, டையமெண்டு அச்சுக்கூடத்தில்
ஸ்ரீ: வெங்கிடாசலம் செட்டியாரால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16,
'தமிழ் உலகு' கார்யாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.

ஸ்திரீகளும்—நாவல்களும்.

[C. S. மகாதேவன், B.A.]

ஒரு தேசத்தின் முன்னேற்றத்திற்கு கல்வி அபிவிருத்தி அவசியமென்பதை எவரும் மறுக்க முடியாது. அக்கல்வி தகுந்தவழியில் அளிக்கப்பட வேண்டும். என்பதும் கவனிக்கற்பாலது. புருஷர்களுக்கன்றி, ஸ்திரீகளுக்கும், சிறிதளவு கல்வி அவர்களுடைய எதிர் காலவாழ்வை சிறப்பிக்க அளிக்கப்பட வேண்டும்.

எத்தகைய கல்வி அவர்களுக்கு வேண்டும்? மேல் நாட்டு நாகரிகக் கல்வியா, அன்றி நம் பண்டைநாட்டுக் கல்வியா, அவர்களை உண்மையில் உயர்வாகச் செய்யும் இயல்புடையது? நான் அறிந்த வரை, நம் நாட்டுக் கல்வியே அவர்களுக்கு எவ்வாற்றாலும் நற்பயனையளிக்கக் கூடியதெனத் திடமாகக்கூறுவேன். ஆனால், அந்தோ! தற்காலம் நம்முடைய சகோதரிகளுக்கு அளிக்கப்படும் கல்வி பெரிதும் புலம்பத்தக்கவாறு போய்விட்டது. இந்நிலைமை ஏற்படுவதற்குக் காரணம் நம்முடைய மதியீனமேயாகும். தாய் மொழியால் பயிற்றப்பட வேண்டிய பாடங்களை ஆங்கிலத்தாதரவில் பயிற்றுவிக்கிறார்கள். நாளடைவில் தாய்மொழி தவிக்க ஆங்கிலம் மகிமைபெற்று கைகுலுக்கல், கால்குலுக்கல் கொண்டு நர்த்தனமாடத் தலைப்படுகின்றது. இது உபர்தரக்கல்வி பெற்று உய்யானவனங்களிடை உலவும் நம் சகோதரிகளின் நிலைமையெனலாம்.

இதுவன்றி, இரண்டும் கெட்ட படிப்பு பெற்று, முடிவடைவதன்முன் மணமென்ற மாயவலையின் கண் சிக்குண்ட சிலரின் நிலைமை இதனிலும் கேவலமெனலாம். தமிழ் படிப்பு சிறிது தெரிந்ததினால் ஏற்பட்ட திவலையனவு நாகரிகத்தால் கண்ட எத்தமிழ் புத்தகங்களையும் படிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். எனினும் இவர்கள் ஆவலுடன் எப்பாடு பட்டாயினும் படிக்க முயற்சிப்பது இனிய தேனொழுகும்! நாவல்களைத்தான்.

இரண்டாவதாக்கூறிய வகுப்பாரில் ஒரு சகோதரி, நாவல் வாசிக்காத எவரையேனும் சந்திக்க நேரிட்டால் அவரை மதிப்பதில்லை. முகமெடுத்து பார்ப்பதில்லை. ஊண் உறக்கம் விட்டு எத்தனை நாட்கள் படித்தாலும் சலிப்பதில்லை. உயிர்பெற்று இப்பூவுலகில் வாழ்வதெல்லாம், நாவல் படிப்பதற்கே, யென்ற தத்துவம் படைத்தவர்கள் இவர்கள். நல்ல இதிகாச புராணங்களை கையினால் தொடுவதற்கும் வெட்கப்படுகிறார்கள். புராணங்களைப்பற்றிப் பேசுவோரைப் புறக்கணித்து அவர்களை, வெறும் கட்டுப் பெட்டிகள், என ஏளனம் செய்வார்கள்.

இவர்கள் நிலைமை இவ்விதமிருக்க, நாவல் எழுதும் ஆசிரியர்களைப் பற்றி கூறவேவேண்டுவதில்லை. அவர்களுக்கு பொல்லாக்கோபம் வந்துவிடும், என் நிலைமை சிறிது நுட்பமாகப்போய்விடும். சிற்றின்பச் சாக்கடையின் வர்ணிப்பில்லாத நாவலில்லை போவதில்லை இதையறிந்தும் எழுதும் அவர்களை நாம் குறைகூறுவதில் பயனில்லை. ஆனால் இவர்களுக்கு நான் கூறுவது ஒன்றுளது. அஃதுயாதெனில், நான்கூறும் இவ்விகார நாவல்கள் எழுதுவோர்கள் யாவரும், அந்நாவல்களை தம் பெண்மக்களுக்கு, தம்முடைய வருந்தப்பெற்ற பொருளால் வாங்கிக் கொடுத்து உற்சாகப்படுத்த வேண்டுமென்பதே. நாவல்படிப்பதை, போதை மருந்துண்பதற்குச்சமானமாகக்கூறுவது எவ்விதத்திலும் பொருந்தும். நாவல் இல்லாத புஸ்தகாலயம் மதிக்கப்படுவதில்லை நாவல்படியாதவர்கள் நாகரிக சிரோமணிகளாகக் கருதப் படுவதில்லை. இத்துடன் நாவல்கள் எழுதுவதிலும் சுயநிர்மாண மொன்றும் கிடையாது. எல்லாம் ஒன்றிரண்டு தவிர ஆங்கில நாவல் ஆசிரியர்களும் நம் நாட்டு ஆசிரியர்களும் ஒன்று கூடி உற்பவித்தனவே யன்றி வேறல்ல. இதை யாதெனக் கூறலாம்?

தற்காலத்து நாகரிகக்கதைகளை நம் சகோதரிகள் பொருள்கொடுத்துப் பெற்றுப் படிக்க முயற்சிப்பதைக் காட்டிலும், நல்ல புராண இதிகாசங்களைப் படித்து தம்மைப் புனிதப் படுத்திக்கொள்ளுதல் நன்று. நாகரிக நாவல்கள் பொதுவாக, பொய், சூது, கொலை, களவு, விபசாரம் என்ற அரும் பெரும் பொருள்களை நன்குணர்த்துவதற்கு ஏற்பட்டனவேயென்று நாம் திடமாக மனதிற்கொண்டு அவைகளை உதறித்தள்ளி விடுவோமாக. கெட்டத்தைக் காட்டினால்தான் நல்லதின் பயன் வெளியாகும், என்று வாசிப்பது மிக்க நாகரிகமானதேயன்றி வேறல்ல. நம்பொருளை நம்மையாவது நம்முடைய தேசத்தையாவது சிறிது, உலகின்கண்ணுள்ள இதர ஜாதியார்களின் மதிப்பில் தாழ்ந்தவர்களல்ல வென்பனுக் கினோக்க பிரயோஜனப் படுத்துவோமாக.

"மக்களுடம்பு பெறற்கரிது பெற்றபின்
மக்க ளறியு மறிவரிது—மக்க
ளறிவறிந் தானென்பா ரறத்தின் வழுவார்.
நெறித்தலை நின்றேழுகு வார்."

THE YOUTHFUL PERIOD
வாலிபப் பருவம்.

உலகப்பிரசித்திவாய்ந்த ஹாவ்லாக் எல்லிஸ் (Havelock Ellis) சமீபத்தில் தாம் எழுதிய ஒப்புயர்வற்ற "ஆண் பெண் மக்களின் தத்துவம்" (Psychology of sex) என்ற நூலில் "மதசம்பந்தமாக நாம் செய்ய வேண்டிய ஆராய்ச்சிகளையெல்லாம் செய்து விட்டோம். இனி ஆண் பெண் மக்களின் தத்துவ சம்பந்தமாகத்தான் நாம் ஆராய்ச்சிகள் செய்யவேண்டும்" என்று கூறினார். இக்கூற்றின் உண்மையை நாம் உணர்ந்து கொள்வது அருமையல்ல. ஆறுபாகங்களாகப் பிரிக்கப்பட்ட அவர் எழுதிய அருமை மிக்க நூலைப்படித்தபோது ஆண் பெண் சம்பந்தமான எவ்வளவோ

புதிய உண்மைகளை நாம் உணர்ந்துகொண்டோம். மகாத்மா காந்தியால் மிகப் பெரியவரென்று பாராட்டப்படும் எட்வர்ட் கார்ப்பெண்டர் (Edward Carpenter) எல்லிஸ் எழுதிய சிறந்த நூலை மிகவும் புகழ்ந்தெழுதுகிறார். நம் வாழ்க்கையின் நடுச்சக்கரமாயிருப்பது ஆண்பெண் விஷயமே என்பதை அறியாதாரில்லை. உலகத்தின் இன்பதுன்பத்திற்கும் அதுவே காரணமாம். இம்முக்கியமான விஷயத்தைப் பற்றிய உண்மைகள் பெரும்பான்மையோருக்குத் தெரியா. அவ்வுண்மைகளையெல்லாம் இச்சிறு கட்டுரையில் கூறுவது சாத்தியமாகுமா? அல்லாமலும் அவ்வுண்மைகளெல்லாம் பத்திரிகையில் வெளிப்படுத்தக்கூடியனவுமல்ல. மிஸ்டர் எல்லிஸ் தம் புத்தகத்தை அமெரிக்காவில் முதன் முதல் வெளிப்படுத்தியபோது அது இங்கிலாந்துக்கு வரக்கூடாதென்று தடுக்கப்பட்டது. ஆயினும் உலக நன்மையைக் குறித்து நாற்பது ஐம்பது வருடங்களாக அரும்பாடுபட்டு எழுதிய அப்புத்தகத்தைத் தம் நாட்டில் வரக்கூடாதென்று தடுத்த குற்றத்தை ஆங்கிலேயர் பின்னர் உணர்ந்துகொண்டு அந்நிபந்தனையை நீக்கி விட்டனர்.

இந்தப் புத்தகத்தில் அவர் மிகவும் பயங்கரமான உண்மைகளைக்கூறுகிறார். அவ்வுண்மைகளையெல்லாம் திரட்டிக்கூற இங்கு இடமில்லாமைபற்றி யாம் வருந்துகின்றோம்.

ஓர் ஆண் மக்கன் பதினான்கு வயதடையும் வரையில் அவன் ஆணுமல்ல பெண்ணுமல்ல. இங்ஙனமாதலாலே தான் பதினான்கு வயதுக்குக் குறைந்த ஆண்பிள்ளைகளை பெண்ணை நேசிப்பது போலவே நாம் நேசிக்கின்றோம். ஓர் ஆண் மகனுக்குப் பதினான்கென்ற பருவம் மிக்க பயங்கரமானது. அந்தப் பருவத்திலிருந்து தான் அவன் பிற்காலம்வாழ்வு ஆரம்பமாகிறது. இந்தப்பருவத்தில்தானே அநேக பையன்கள் கெட்டு விடுகிறார்களென்று எல்லிஸ் கூறுகிறார். இக்கேட்டிற்கு அநேக காரணங்களுள்ளன வென்றாலும் அவற்றுள் ஓர் பணிப்பெண் (ஆயா) ணைக்கொண்டு பையனை வளர்ப்பதும் ஒன்றாகுமென்று உடற்கூற்று நூல்வல்லார் சொல்லுகிறார். இந்தப் பணிப்பெண் பையன் கோபமாயிருக்கும்போது அவன் கோபந்தணியவேண்டி அவனுக்கு ஒருவிதமான இன்பத்தை ஊட்டுகிறாளாம். பணிப்பெண் வைத்துக் குழந்தைகளை வளர்ப்பது அநேகமாய் நம் இந்தியர்களிடத்தில்லை. இதைத் தப்பினும் பள்ளிக்கூடத்தில் இன்னொரு கண்டமிருக்கிறதென்று அவர் மொழிகிறார். இந்தக் கண்டத்தைத் தப்புவதுதான் மிகவும் அரிது. இவர் உலகத்தில் பல பள்ளிக்கூடத்திலும் கல்லூரிகளிலுமுள்ள பையன்களின் உண்மைகளையெல்லாம் அறிந்துவெளியிடுகிறார். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் கல்லூரியிலும் ஒழுக்கங் கெடாமலிருக்கும் பிள்ளைகள் நூற்றுக்கு எட்டு ஒன்பது தேறுவதும் அருமையாம். பன்னிரண்டு வயதிலிருந்தே இப்பையன்கள் கெட்டுவிடுகிறார்கள்.

சிறுவர்கள் அழிவதற்குக் காரணம் தற்கால நாகரீகமென்று சொல்லுவது குற்றமாகாது. பிரமசர்யத்தின் பெருமையும் குணமும் இக்காலத்தில் பெரும்பாலோருக்குத் தெரியாமற் போயின. நம் ஆன்றோர் பிரமசர்ய ஒழுக்கத்தை மிகவும் வற்புறுத்தினர். ஒவ்வோர் இளைஞரும் இவ்வொழுக்கத்தை அனுசரிக்கக் கடமை பட்டிருந்தனர். சிற்றின்பத்திற்கு ஏதுவான விஷயானுபவங்களிலிருந்து அவர்கள் காக்கப்பட்டனர். பிரமசர்யத்தை அநுஷ்டிப்பதால் உண்டாகும் பிற்கால நன்மைகளையும் அவர்கள் உணர்ந்திருந்தனர். கல்வி கற்பதைக் காட்டினும் பிரமசர்யத்தின் உண்மைகளை உணர்ந்து கொள்ளலே சிறந்ததென அவர்கள் கொண்டு வந்தனர். அவர்கள் பெற்றோர்களும் அவர்கள் பிற்கால வாழ்வில் கண்ணுங் கருத்துமாயிருந்து வந்தனர். இவர்களுக்குக் கல்வி போதிக்கும் குருவும் இவர்களிடத்துத் தந்தையை யொத்த பரிவுடையவராயிருந்தனர். இக்காரணத்தால் தான் அக்காலத்தில் ஆசிரியர் ஐங்குரவருள் ஒருவராக மதிக்கப்பட்டனர். பிரமசர்யத்தை அநுஷ்டிக்கும் பிள்ளைகள் பெரும்பாலும் மனிதசஞ்சாரமில்லாத காட்டிலே தம் ஆசிரியரோடு சென்று தங்கள் பிரமசர்ய பருவம் முடிந்து கல்வித் துறையில் சிறக்குங்காறும் அங்கிருந்து "என்ன நோன்பு நோற்றாள் இவனைப் பெற்ற வயறுடையாள்" என்று கண்டவரெல்லாம் பாராட்டும்படியான இளஞ் சிங்கங்களாய் வளர்ந்து கிருகஸ்தாசிரமத்தை மேற்கொள்வர். தற்கால நாகரீகம் அவ்வொழுக்கத்தை அடியோடு கவிழ்த்து விட்டது.

நாகரீகமடைந்த தேசங்களில் அமெரிக்கா மிகவும் உயர்ந்திருக்கிறதென்பதை மறப்பாரில்லை. அங்குள்ள இளைஞரைப்பற்றி வால்ட் விட்மான் (Walt Witman) என்பவர் பின்வருமாறு கூறுகிறார். "இங்குள்ள பிள்ளைகள் வீரமில்லாமல் இளவயதிலேயே முகம் வெளுத்து தலை நரைத்து முதுகு வளைந்து நரம்புந் தோலுமாய் 90-வயதடைந்த கிழவர்களைப்போல் நடைப் பிணமாய்ச் சுடுகாட்டை நோக்கி நிற்பவர்களாயிருக்கிறார்கள்; இவர்கள் நிலை மிகவும் பரிதபிக்கக் கூடியது." இங்கிலாந்து முதலிய நாடுகளிலுள்ள பிள்ளைகளைப் பற்றியும் இங்ஙனே தான் ஹாவ்லாக் எல்லிஸ் முதலிய அறிஞர் கூறுகின்றார். இவ்வுண்மைகளையெல்லாம் பரியாலோசிக்குங் காலத்தில் தற்கால நாகரீகமானது உலகத்தின் புரை நோயாயிருக்கின்றதென்பது நன்கு விளங்கும். "நாகரீகமும் அது வந்தவாறும் அதனை நீக்கும் வழியும்' (Civilization, Its cause and cure) என்ற அருமை மிக்க நூலில் எட்வர்ட் கார்ப்பெண்டர் இப்போலி நாகரீகத்தின் தன்மைகளை யெல்லாம் எடுத்துக் கூறுகிறார்.

வாலிபர்கள் அழிவதற்கு இன்னும் எத்தனையோ வழிகள் உண்டு. பெண் ஆண் இன்பம் இன்னதென்று தெரியாமலே இளமைப் பருவமானது கழிய வேண்டுமென்று எல்லா அறிஞர்களும் வைத்திய நிபுணர்களும் தேக தத்துவ நூலாரும் கூறுகிறார். இந்த விதமாகத் தம் பிள்ளைகளைத் தாக்க வேண்டிய கடமைகளைப் பெற்றோர்களும் அப்பிள்ளைகளைக் காத்து வருவோர்களும் இன்றியமையாததாகக் கொள்ள வேண்டும். எத்தனையோ வாலிபர்கள் இன்பம் ஒன்றையே கருதித் தம்மைக் காட்டிலும் வயதில் மூத்தாளோடு துயில் கின்றார்கள். வயதில் இளைய பெண்கள் தம்மின் மூத்தவர்களையும் வயதில் மூத்த ஸ்திரீகள் தம்மை காட்டிலும் வயதில் குறைந்தவர்களையுமே கூடவிரும்புகிறார்களென்று மிஸ்டர் எல்லிஸ் கூறுகிறார். இங்ஙனமாக வாலிபர் தங்களைக் காட்டிலும் வயதின் மூத்த கைம்பெண்களையும் மற்ற ஸ்திரீகளையும் கண்டு விலக்கிவிட வேண்டும். இளைஞர்க்குத் தம்மின் மூத்த ஸ்திரீகளோடு எந்தவழியிலும் தொடர்பிருக்கக்கூடாது. மூத்தவர்களான ஆண்கள்பெண்கள் கூட்டுறவை விரும்பி அதில் இன்பம்காண்பதுபோல் இளைஞரும் பிறர் கூட்டுறவை விரும்பி அதில் இன்பம் காண்கிறார்களென்று எட்வர்ட் கார்ப்பெண்டர் சொல்லுகிறார். ஆயினும் இவர்களுக்குள் ஒரு வித்தியாசமிருக்கிறது. மூத்தவர்கள் சூக்ஷ்ம இன்பத்தை வெறுத்து ஸ்தூல இன்பத்தை நாடுகிறார்கள். இளைஞர்க்கு ஸ்தூல இன்பமும் சூக்ஷ்ம இன்பமும் ஒன்றேயாகும். ஆதலால் ஒழுக்கமுள்ள வாலிபர்களின் கூட்டுறவும் தங்கள் பெற்றோர்களின் நட்பும் அன்பும் இவர்களுக்கு வேண்டுவது அவசியமாகுமென்றும் அவர் பின்னும் கூறுகின்றார். எந்த வகையிலும் இளைஞர்க்கு சிற்றின்பத்தில் அவா உண்டாகாதபடி பார்த்து கொள்ளவேண்டும். தற்கால நாகரீகமே சிற்றின்பத்தில் அவா வுண்டாவதற்கு ஏதுவாகின்றதென்றும் அவர் கூறுகிறார்.

இந்த நாகரீகத்திற்கும் பணத்திற்கும் மிகவும் சம்பந்தமிருத்தலால், பணக்காரர்கள் கெட்டுப் போவது சாதாரணமா யிருக்கிறது. இதன் பயனாகவே பணக்காரர்கள் க்ஷீணமடைந்து விடுகிறார்கள். அவர்களுக்குச் சந்ததி அபிவிருத்தியு மில்லை இவ்வுண்மையை மிகச் சிலரே உணர்ந்திருக்கின்றனர். தேச சுகாதாரம் (சிக்காகோ) என்ற பத்திரிகையில் ஒருவர் எல்லா வசதிகளுமுடைய பணக்காரர்கள் சந்ததி அபிவிருத்திசெய்ய முடியாமலும் ஒரு வசதியுமில்லாத குடியானவர்கள் சந்ததி அபிவிருத்தி செய்யக்கூடியவராகவு மிருக்கின்றனரே, தகுதியுள்ளவர்கள் நிலைத்திருத்தல் (Survival of the fittest) என்பது போல் தகுதியல்லாதவர்கள் நிலைத்திருத்த லென்று (Survival of unfittsst) தலைகீழாய் மாறி விட்டதே என்று இரங்குகின்றார். இவர் எல்லிஸ் முதலியவர்களைப் போல் விஷயங்களை நுணுக்கமாய் அறிபவரல்லரெனத் தெரிகிறது. உண்மை தலைகீழாய்ப் புரண்டு விட்டதற்கு நாகரீகமே காரணமென்பதை அவர் தேறவில்லை.

தற்கால நாகரீக வாசனை சிறிது மில்லாமலே நாம் நம் பிள்ளைகளை வளர்க்கவேண்டும்; பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கனுப்பிக் கல்வி கற்பதைப் பார்க்கினும் உத்தம குணங்களுடைய ஒரு நல்லாசிரியரிடத்து விட்டு கல்வி கற்பிப்பதே சிறந்தாகும். இந்நாட்களில் அப்படிச் செய்ய முடியாவிட்டால் நல்லொழுக்கத்தையும் பெண் ஆண் தத்துவ விஷயங்களையும் அவர்களுக்குப் போதித்து வரவேண்டும். ஒரு தேசத்தில் நம்பிக்கை அதன் இளைஞர்களிடத்திலிருக்கிறது. ஆதலால் பெற்றோர்களே யன்றித் தேசமும் இளைஞர்களின் நலத்தில் கருத்து வைக்கவேண்டும். இல்லையேல், அத்தேசம் குன்றியழியும் நம் அரசியல் அறிஞர் கருத்துக்கள் எங்ஙனமாயினும் தற்கால நாகரீகம் ஒரு தேசத்தின் உயிரை அரித்துத் தின்னுவதென்ற வகையில் எல்லாரும் கருத்தொருமைப்பட்டவராயிருக்க வேண்டும்.

'தமிழகம்'

புயற் காற்று.

[V. நாராயணையர் M. A, M. L.,]

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அநந்தபாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச் சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பி வரும் போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்யாண காலத்தில் தன் புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தாணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறு ஒருவர் மனைவி என்றும் அறிந்ததும், ஹேமநளினியை மறுபடி நாடி கல்யாணத்திற்கு உடன்பட்டதும்; யோகேந்திரன் அக்ஷயனுடன் இராமேசன் வீடு சென்று அங்கு இருந்த கமலாவுடன் இராமேசன் பேசிக்கொண்டிருந்ததை நேரில் பார்த்து இராமேசனோடு ஆத்திரத்துடன் வாதாடி கல்யாண ஏற்பாட்டைக் குலைத்ததும்; இராமேசன் கமலாவுடன் கப்பல் மார்க்கமாய் வேறு இடம் நோக்கிச் சென்றதும்; பிரயாணகாலத்தில் ஒரு நாள் இராமேசன் கமலாவுக்கு கதை சொல்லுவது போல் தன்னுடைய சரித்திரத்தைச் சொல்லி கமலாவை கலங்கச் செய்ததும், சமையல் வேலைக்கு உதவி புரியும்படி அமர்த்தப்பட்ட உமேசனுடைய பரிதாப நிலையைக் கேட்டு கமலா அவன்பால் கருணை கொண்டதும்; பிறகு அதே கப்பலில் வந்த சக்கிரவர்த்தி "மாமா" என்பவருடன் சிநேகமானதும்; அவருடைய விருப்பத்தின் பேரில் அவரூராகிய காஸிப்பூரில் இராமேசன் வக்கீலாய் அமர்வதென்று தீர்மானித்ததும்; காஸிப்பூர் வருமுன் இராமேசன் அத்தீர்மானத்தை மாற்ற முயன்றதும் கமலா

அதற்குச் சம்மதியாது திடமனதாய் இருந்ததும்; பிறகு இருவரும் காவிப்பூர் வந்ததும்; வந்தபின் கல்கத்தாவுக்குப் போய் தன் காரியங்களை முடித்துக் கொண்டு காவிப்பூரில் வசிப்பது என்று இராமேசன் புறப்பட்டுச் சென்றதும்; இராமேசன் கல்கத்தாவுக்குப் போய் வந்ததும்; பின்பு கமலாவுடன் தனிக்குடித்தனம் செய்ய நினைத்து அலஹாபாத்திற்கு சந்நத் வாங்கச் சென்றதும் சக்கிரவர்த்தி மாமாவின் சென்றதும் அவர் மகள் சைலஜாவுடன் கமலா காவிப்பூரில் இருந்ததும் சென்ற சஞ்சிகைகளிலுள்ள கதை]

விடியற்காலம் கமலா கண்ணைத் திறக்கும் போது சைலஜா தன் படுக்கை யருகில் நிற்கக் கண்டாள்; உடனே இவ்வளவு நேரம் தூங்கி விட்டேனே என்ற வெட்கத்துடன் கமலா எழுந்து உட்கார்ந்தாள்.

“எழுந்திராதே கமலா, இன்னும் சற்று நேரம் தூங்கு; உன் உடம்பு சரியாக இல்லை; சிரமம் அதிகம்; கண்கள் இடுங்கி இமைப் புறத்தில் கருவரி யோடியிருக்கிறது; உன் உடம்பு எப்படி இருக்கிறது சொல்” என்று சைலஜா அவளருகில் உட்கார்ந்து கமலா கழுத்தைக் கட்டித் தழுவினாள்.

கமலாவால் துயரத்தை அடக்க முடியவில்லை. பெருமூச்செறிந்து முகத்தை சைலஜாவின் தோளோடு சாற்றிக் கொண்டு விம்மிவிம்மி அழுதாள் கமலா; சைலஜாவும் அவளை இறுகத் தழுவிய வண்ணம் துயரத்தை ஆற்ற முயன்று பேசவேண்டும் என்று யத்தனிக்காமல் இருந்தாள்.

இறுதியில், கமலா மெதுவாய் தன்னைக் கட்டிக் கொண்டிருந்த சைலஜாவின் கரங்களை ஒதுக்கித் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு “சொல்” என்று சிரித்தாள். “போதும் போதும், நிறுத்து;” என்றாள்சைலஜா. “நீதான் ஒன்றும் சொல்லாது ஒளிக்கிறாய்; உன்னைப் போல் பேசாதொளிக்கும் பெண்ணை நான் பார்த்ததில்லை. ஆனாலும் எனக்குத் தெரியாது என்று நினைக்கிறாய்; நான் அவ்வளவு அசடா என்ன? என்ன என்று சொல்லட்டுமா, இராமேசபாபு அலஹாபாத்திற்குப் போன பிறகு அவர் உனக்கு ஒரு காகிதம் கூட எழுதவில்லை; அதனால் உனக்கு வருத்தம்; அதை என்னிடம் சொல்லக்கூடாதாக்கும். ஆனால் அவருக்கு அங்கே எவ்வளவோ வேலையிருக்கும், இன்னும் இரண்டு நாளில் வந்துவிடுவார், அதற்குள்ளே காகிதம் எழுதாமல் இருக்கிறாரே என்று வருத்தப்படுவது சரியன்று, பைத்தியக்காரி.

“ஆனால் நான் இவ்வளவெல்லாம் சொல்லுகிறேனேயொழிய எனக்கும் இப்படி நேர்ந்தால் நானும் இப்படித்தான் உன்போலவருத்தப்பட்டுக் கொண்டிருப்பேன். பெண்களே இப்படித்தான் வீணாய் வருத்தப்படுவது சுபாவம்; ஒரு மட்டுக்கு அழுதானபின் மனது சமாதானமாய்விடும்; இதை மறந்துவிட்டு உல்லாசமாய் இருக்கலாம்.” என்றாள் சைலஜா.

கமலாவைத் தன்மார்போடு அணைத்துக்கொண்டு மறுபடியும் “இராமேச பாபுவை மன்னிக்கவே முடியாதென்று தானே தோன்றுகிறது உனக்கு இப்பொழுது? உண்மையைச் சொல்.”

“ஆம், உண்மையாய்” என்றாள் கமலா.

சைலஜா அவள் கன்னத்தை மெல்லத் தட்டி; “அப்படித்தான் இருக்குமென்று நினைத்தேன்; ஆமாம்; இருக்கட்டும், வருத்தப்படாதே” என்று தேற்றினாள்.

அன்று காலையிலேயே சைலஜா அலஹாபாத்திற்கு தன் தகப்பனாருக்குக் காகிதம் எழுதினாள். “இராமேச பாபுவினிடமிருந்து காகிதமொன்றும் வரவில்லையென்று கமலா அதிகம் வருத்தப்படுகிறாள். இப்படி புதியதோர் இடத்தில் தனியே விட்டு விட்டு காகிதங்கூட எழுதாமல் போனால் அவள்தான், பாவம் என்ன செய்வாள், இன்னும் அலஹாபாத்தில் அவர் காரியம் முடியவில்லையா? எத்தனையோ பேர்கள் காரியமே கவனமா யிருந்தாலும் அவர்களுக்குக் காகிதம் எழுத சாவகாசம் கிடைக்கிறதே.”

மாமா இராமேசனைத்தேடிப் பிடித்து தன் மகள் எழுதிய காகிதத்தின்றும் கொஞ்சம் வாசித்துக்காட்டி கோபித்துக் கொண்டார். வாஸ்தவத்தில் இராமேசன் கமலாவைப்பற்றி யோசியாமல் ஒரு நிமிஷநேரங்கூட இருக்கவில்லை.

ஆனால் அவன் யோசிக்க யோசிக்க, சங்கடத்தை நிவர்த்திக்கும் வழி யொன்றுமே தோன்றவில்லை. ஆகையால் அலஹாபாத்தில் அவன் தாமதித்ததற்குக் காரணம் கமலாவைப் பற்றி அவன் கவனியாததல்ல, என்ன செய்வது என்று தெரியாததே காரணம். அப்படி இருக்கும்போது, இவை போதாவென்று சைலஜாவின் காதமும் வந்து சேர்ந்தது.

தான் நேரே எழுத சங்கோசப் பட்டாலும் தன்னைவிட்டிருக்க கமலா அதிகம் வருந்துகிறாள் என்று சைலஜாவின் கடிதத்தினின்றும் நன்கு விளங்கிற்று. இனி எவ்வழி நடப்பது என்ற யோசனையை விட்டுவிடவேண்டியதே; தன்சுகம் மட்டும் அல்ல, கமலாவின்காதலும் இதுதான் வழியென்று காட்டி நின்றது. அவர்கள் இருவர் வாழ்க்கையையும் ஒன்றாய்ப்பிணைத்து அந்தமணற்றிட்டில் அவர்கள் இருவர் இருதயங்களையும் தெய்வம் ஒன்றாக்கிவிட்டதுபோலும்.

ஆகவே இராமேசன் உடனே உட்கார்ந்து கமலாவுக்குப் பின் வருமாறு எழுதினான்.

என் ஆசைநாயகி,

நான் இப்படி உன்னை அழைத்தது காகிதமுறைப்படியே யொழிய உண்மையில் ஆசைக் காதலியாக உன்னைக் கொள்ளவில்லை என்று நினையாதே, கமலா. உண்மையில் நீ என்

ஆசைக்காதலியாக இல்லாவிட்டால்; உன்னைவிட வேறு ஒருவரையும் காதலிக்காம லிருக்காவிட்டால் நான்உன்னை ஒருக்காலும் பேருக்கு மட்டும் ஆசைநாயகி என்று அழைக்கமாட்டேன். இதில் உனக்கு சந்தேகங்கள் உண்டாயிருந்தால், உன் இஷ்டங்களுக்கு விரோதமாய் நான் எப்பொழுதாவது நடந்திருந்து உன் மனதைப்புண்ணாக்கி யிருந்தால், இப்பொழுது முழுமனதுடன் உன்னை ஆசைநாயகி என்று அழைப்பது அந்த சந்தேகங்களை நீக்கி அந்தப் புண்களை ஆற்றட்டும்!

வீணாய் விஸ்தரிப்பானேன்? நான் இதுவரை நடந்துகொண்ட மாதிரி உனக்கு அவசியம் வருத்தத்தைக் கொடுத்திருக்கும். உன் மனதுக்குள்ளே என்னை அதற்காக வைதுக் கொண்டிருந்தால் நான் குற்றவாளி யல்ல என்று மறுதளித்து உன்னைத் தேற்ற இடமில்லை. நீ என் ஆசைநாயகி என்பதை மட்டும் திரும்பத் திரும்ப வற்புறுத்திச் சொல்லி நான் வேறு ஒருவரையும் காதலிக்க வில்லை என்று விளக்குவதைத் தவிர வேறு நான் ஒன்றும் செய்ய முடியாது. நான் இப்படிச் சொல்வது இதுவரை செய்த பிசகுகளுக்குப் பரிகாரமாகாது. ஆனால், வேறு நான் என்ன செய்யக் கிடக்கிறது. ஆகையால், கமலா, உன்னை ஆசை நாயகி என்று ஒருதரம் அழைத்து இதுவரை இருந்த சந்தேக மனஸ்தாபங்களைத் துடைத்து இனி புதிதாய் நம்முடைய காதலே அஸ்திவாரமாகக் கொண்டு இல்லற வாழ்க்கையாகிய கட்டிடத்தைக் கட்டுவோம். உன்னைத் தவிர வேறு ஒருவர் ஞாபகமும் எனக்கு இல்லை என்பதை நம்பவேண்டும்; கமலா, நீ தான் எனக்கு ஆசை நாயகி. உன்னைத் தவிர வேறு எனக்கு ஒருவரும் இல்லை என்பதை நீ நம்பினால் பிறகு சந்தேகங்களும் மனஸ்தாபங்களும் நின்று விடும்.

என் வழிபாட்டால் உன் காதல் என்பால் உண்டானாலும் சரி உண்டாகாவிட்டாலும் சரி, அதைப்பற்றி உன்னைக் கேட்கவும் அதிகாரம் இல்லை எனக்கு. ஆனால் கேட்க வேண்டுமென்ற ஆசை மட்டும் இருக்கிறது. என் காதலானது கேள் என்று என்னைத் தூண்டுகிறது. அதற்கு ஒரு நாள் நீ பதில் அளிப்பாய் என்பது நிச்சயம். "அப்போது வாய்ப் பேச்சு ஒன்றும் பேசமாட்டோம். மனது மனதுடன் ஒத்துப் பேசும்." என்று உன்பால் எனக்குள்ள காதல் நம்பிக்கை தருகின்றது. நான் உனக்குத் தகுந்த காதலன் என்று என்னால் பெருமை பேசவொண்ணாது. ஆயினும் நான் உன்னை என் காதற் தெய்வமாய் வழிபடுவது வீணாகாதல்லவா?

இந்தக் காகிதத்தை வாசித்தால் ஏதோ கஷ்டப்பட்டு கமனம் செய்ததென்று உனக்குத் தோன்றலாம் என்று நினைத்து இதைக் கிழித்தெறிந்து விடலாமா என்றுகூட எனக்குத் தோன்றிற்று. ஆனால் என்மனதில் உள்ளதை உள்ளபடி எழுதுவது அசாத்தியமாக இருக்கிறது. காகிதங்கள் இருவர் ஒருவருக்கொருவர் எழுதவேண்டியவைதாமே! முதற் காகிதத்தில் எழுதுபவனுக்கு இந்தக் கஷ்டம் எப்பொழுதும் இருக்கும். தன் மனதிலுள்ளவற்றை அப்படியே எழுதமுடியாது. பிறகு நம்மிருவர் மனமும் ஒத்து உருகும்போது உனக்கு நிஜமான காகிதங்கள் வரையமுடியும். அறையின் இருபுறக்கதவுகளும் திறக்கப்பட்டால் தானே காற்று தாராளமாய் வீசமுடியும்.

கமலா, என் கண்ணே, உன் இருதயக் கதவை எப்பொழுது எனக்காக திறந்து வைப்பாய்?

இவை எல்லாம் மெதுவாகவே முற்றவேண்டும். அவசரப்பட்டால் கெட்டுப்போம். இந்தக்காகிதம் உனக்குக் கிடைக்கும் நாளுக்கு அடுத்தநாள்நான் காலிப்பூருக்கு வந்துவிடுவேன். நீ வீட்டில் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வெகுநாள் வீடு ஒன்றுமின்றி இருந்து விட்டோம். அந்த வாழ்க்கை அன்றோடு மாறவேண்டும். இனியும் தாங்க முடியாது. இப்பொழுதாவது வீட்டிற்கு யஜமானியாய் என் காதற்கரசியாய் இருப்பதை நான் கண்கொண்டு காணவேண்டும். அப்பொழுதுதான் நாம் இரண்டாந்தரம் "கண் காட்சிக் கல்யாணம்" செய்து கொண்டதாகும்.

முதல் தரம் நாமிருவரும் கண்கொண்டு கண்டு கொண்டது ஞாபகமிருக்கிறதா? ஆற்றங்கரையோரத்தில் வெண்ணிலவில் தனித்து அந்த மணற்திட்டில், அகன்றவானத்தின்கீழ், வீடின்றி, தாய் தந்தையர் இன்றி, வேறு எவ்வித உறவினருமின்றி அவ்விழா நடந்தேறியதே!

அது ஒரு கனாப்போல் தோன்றுகிறது எனக்கு. ஆகையால் இன்னொரு முறை அவ்விழா நடைபெறவேண்டும். நாற்சுவர் மத்தியில் நம்முடைய சொந்த வீட்டிலே காலை வேளையில் கனவென்று தோன்றாதபடி வியக்தமாய் நடைபெற வேண்டும். அப்பொழுது இனித்து புன்சிரிப்புத் தாங்கி நிற்கும் உன் முகம் வாசற் கதவிற் பொதிந்து, காத்து நிற்கும் உன் முகம், என் மனதையும் ஞாபகத்தையும் விட்டு எப்பொழுதும் அகல்வே அகலாது. அவ்விதத் தோற்றம் ஒன்றைக்காண விரும்புகிறேன் நான். என் கண்ணே! உன் இருதய வாயிலில் ஏழை நான் யாசித்து நிற்கிறேன், இல்லை என்று என்னைத் துரத்திவிடாதே!

உன் காதலடிமை,

இராமேசன்.

இதோடு 'புயற்காற்று' என்ற கதையின் முதற் பாதி முற்றிற்று.

உலக நடை.

இராஜமகேந்திரபுரத்தில் பித்தாப்பூர் ராஜாவின் அரண்மனையில் ஆந்திர கலா சங்கத்தின் கீழ் சித்திரக் காக்ஷியொன்று நடத்தப்பட்டது. சென்ற மார்ச்சு மாதம் 31-தேதி யன்று கல்கத்தாவிலிருந்து வந்திருந்த பாபு ஆரிய குமார சௌதிரி அவர்கள் காக்ஷியைத் திறப்பித்தபோது, நமது நாட்டின் முற்போக்கை யுணர்த்துவதான இவ்விதக் காக்ஷிகள் அவசியமானவை என்று வற்புறுத்தினர். வேறு நாட்டு நாகரீகங்களால் தாக்குண்டு நமது நாட்டில் ஓவியம் முதலிய சாஸ்திரங்களை சிர்குலையாது காப்பது இந்தியர் கடமை என்பதையும் எடுத்துப் பேசினர். இதுவரை இந்தியச் சிற்பிகளையும் ஓவியக்காரரையும் இகழ்ந்து இழிவாய் பேசுவது போய் ஆதரவுடன் அவர்களைப் பற்றிப் பேசத் தொடங்கியிருப்பதில் தமக்கிருந்த சந்தோஷத்தையும் அறிவித்தார்.

* * *

ஏப்ரல் மாதம் 3-தேதி யன்று பம்பாயில் காலஞ்சென்ற ஸர் பிரோஸிஷாமேதா அவர்களின் உருவச்சிலை முனிசிபல் ஆபிஸின் முன்பாக அமைக்கப்பட்டது. அத்தருவாயில் அக்கிராசனம் வகித்த பம்பாய் கவர்னர் அவர்களும், ஸர் தின்ஷா வாச்சா அவர்களும், ஸர் பிரோஸ்ஷாவின் சிறந்த குணாதிசயங்களைப் புகழ்ந்து அவர் கார்ப்பொரேஷனுக்கும் பம்பாயிக்கும் செய்த உதவிகளை சிலாகித்துப் பேசினர். உருவச் சிலையும் அதின் பீடமும் இங்கிலாந்து சிற்பிகளால் செய்யப்பட்டது என்றும் அவைகளுக்கு ரூபாய் 80000-ஆயிற்று என்றும் தெரியவருகிறது. பம்பாயிலேயே மாத்ரி என்ற பெயர்பெற்ற சிற்பி இருக்க இங்கிலாந்திலிருந்து அவரது உருவச் சிலையை வருவித்ததற்குக் காரணம் எளிதில் புலப்படவில்லை.

* * *

ஏகிப்து தேசத்தில் அரசரின் புராதன ஏகிப்தர் தங்கள் அரசர்கள் இறந்தபோது மம்மிகளையும் ஆடையாபரணம் முதலிய சாமான்களையும் மூடி வைத்திருந்த பாழறை யொன்றிற்கு அவரது உடற்பூந்துகளை அப்படியே தைலத்திலிட்டு பதப்படுத்தி வைத்தனர். வழி கண்டு பிடித்து கண்டெடுத்த பொருட்களின் ஆராய்ச்சியில் ஆழ்ந்து உழைத்த சரித்திர வித்பன்னர் கார்னொவன் பிரபு என்பவர் 'கைரோவில் சவிசுரத்தால் பிடிக்கப்பட்டு 5-தேதி யன்று காலஞ் சென்றார்.

* * *

சென்னை சட்ட சபையில் சிற்சில சீர்திருத்தங்களோடு இந்திய மதஸ்தாபன பரிபாலன சட்டம் அங்கீகரிக்கப்பட்டது. இது கம்மிட்டியார் பல வகைகளில் மாற்றப்பெற்று ஆதியிற்போல் அவ்வளவு கேடுவிளைப்பதாக இல்லாவிடினும் இப்பொழுதும் அதின் நிபந்தனைகளை ஆக்ஷேபனைக்கு இடங்கொடாதவை யென்று கொள்ள மார்க்கம் இல்லை.

மதிப்புரை

சசிகுலதீபம், என்ற புஸ்தகம் பாரதக்கதையில் முக்கிய அம்சங்களும் அக்காலத்தில் இந்தியாவின் நிலைமையும் இதிகாஸத்தின் கௌரவமும் நன்கு விளங்குவதாய் எளிய நடையில் பலரும் வாசித்தின்புறுமாறு எழுதப்பட்டுள்ளது. இதை ஆக்கியவர் உடுமலைப்பேட்டை "காவிய விசாரத V. N. இராமஸ்வாமிநாயுடு அவர்கள்; பிரஜாநுகூலன் பத்திராதிபர் இதற்கு சிறப்புரை வரைந்திருந்திருக்கின்றனர், புஸ்தகத்தின் விலை அணா 6.

உங்களுக்கு.

சுயராஜ்யம் வேண்டுமா?
சுதந்தர தாகம் உண்டா?
உலக அரசியல் படிக்க வேண்டுமா?
காங்கிரஸ் விஷயம் அறிய வேண்டுமா?
சமூக நிர்மாணம் தேவையா?
பண்டைச்சரித்திரம் படிக்க வேண்டுமா?
பாஷாபிவிருத்தி விருப்பமா?
கல்வி, சுகாதாரம், வியாபாரம், தொழில், அபிவிருத்தி தேவையா?
மதப் படிப்பு அவசியமா?

தஞ்சாவூர் ஸமரஸ போதினி எல்லாவற்றையும் போதிக்கும்.

வருஷ சந்தா உள்நாடு ரூ. 7.
,, வெளி நாடு ரூ. 9.

உடனே எழுதுங்கள்.

மானேஜர்:—
ஸமரஸ போதினி,
தஞ்சாவூர்.

இனும்! இனும்!!

ஒவ்வொரு பக்கமும்
சரீர சுகத்தைப்பற்றி
போதிக்கிற தேன்பதை
நமது
காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தைப் படிப்பதால் அறியலாம். தேகத்தைப் பாதுகாப்பதற்கு அனுபவத்துக்கு ஒத்துள்ள நீதி வாக்கியங்கள் நிறைந்து கிடக்கின்றன.

உங்கள் விலாசத்தை தெரிவித்தால் தபாற் செலவின்றி இனமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
தபால் பெட்டி நெ. 1252,
26, பிராட்வே, மதராஸ்.

சுதேசியமானது! உபயோகமுள்ளது!!

அமர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

ஜனரஞ்சனி.

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் பத்திரிகை. தமிழ் இலக்கியம் தேச சரித்ரம், சாஸ்த்ரங்கள், மதசம்பந்தமான விஷயங்கள், நாவல்கள், சிறு கதைகள், ஹாஸ்யங்கள், விநோதவிஷயங்கள் முதலிய வாசிக்க ரஸமான பல வியாஸங்கள் அடங்கியது.

வருஷ சந்தா ரூபாய்	2 0 0
மேல் நாடுகளுக்கு ரூபாய்	3 0 0
மாதிரிப்பிரதி அணா	0 2 0

"ஜனரஞ்சனி" ஆபீஸ்,
4, கொண்டிசெட்டி தெரு மதராஸ்

The United India Life Assurance Co., Ltd.

Head Office: Madras
(Established 1906)

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டாரனைவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராக நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ. 1000 பாலிஸிக்கு ரூ. 15 வீதம் சந்தாதாரர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

Apply to:—K. S. Gopalayya,
MANAGER.

ஆரிய சரித்திரம்.

நீதிக் கதைகள்.

சுமார் 300 பக்கங்கள் உள்ளது. சித்திரப்படங்களும் அமையப்பெற்றது, நான்காம் பதிப்பு. தெள்ளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு, உயர்ந்த கடிதத்தில் பெரிய எழுத்துக்களால் அச்சடிக்கப்பட்டு அழகாய் பயிண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூ. 1—0—0.

ஸ்ரீ கிருஷ்ணன் தூது.

இது வில்லிபுத்தூரார் பாரதத்தைத் தழுவி, பாரதகதையை ஆதியோடந்தமாகச் சுருக்கமாகவும், கிருஷ்ணன் தூதுச் சருக்கத்தை விரிவாகவும் அவ்வவ்விடங்களில் சமயோசிதத்துக் கேற்ப வில்லிபுத்தூரார் அரிய பாக்களின் மேற்கோளுடனும், பள்ளியிற்பயிலும் சிறுவர் சிறுமியர்களுக்கும், ஏனையோருக்கும் மகாபாரதக்கதை இனிது விளங்குமாறு இனிய தெள்ளிய நடையில், வித்வான் ஆருமுக சேர்வையவர்களால் எழுதப்பட்டது. படிக்கப் படிக்க சுவையை உண்டு பண்ணும். சகல நீதிகளும் அமையப்பெற்றது.

விலை ரூ. 1—0—0

கணேஷ் கம்பெனி,
39, தம்பு செட்டி தெரு, சென்னை.

கதர்! கதர்!! கதர்!!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை!!!

பெயர்பெற்ற மோராதாபாத் கதர் உடைகளின் நிலயம்.

விலை வெகு குறைவானது. இந்தியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டக் சாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் மொத்தமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்கள்.

கதர் துணிகள்.

நெ. 1.	10 கஜம்	× 25"	ரூ. $2\frac{1}{2}$ முதல்	ரூ. 3 வரை	
,, 2.	12 ,,	× 27"	,, 4	,, 6 ,,	
,, 3.	16 ,,	× 34"	,, 6	,, 9 ,,	
,, 4.	18 ,,	× 36"	,, 8	,, 12 ,,	
,, 5.	20 ,,	× 44"	,, 11	,, 13 ,,	

வெளுக்கப்படாத கதர் உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம்: 'Shree.'

கதர் சேலைகள் முதலியன.

10 கஜம்	× 45"	ரூ. $4\frac{1}{2}$ முதல்	ரூ. 6 வரை
$9\frac{1}{2}$,,	× 40"	,, 3	,, 5 ,,
3 ,,	× $1\frac{1}{2}$ கஜ	,, 2	,, 3 ,,

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக் கேட்டறிந்துகொள்ளலாம்.

SHREE BANDAR,
Mandi Bans Street,
Moradabad, U. P.